இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 230 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 18 – புதன்கிழமை 01 ஏப்ரல் 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 230 : Thiruvalluvar Year - 2057 - Panguni 18 - Wednesday 01 April 2026 - Madurai 12 Pages ₹ 5.00

## களம் காணும் கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திருச்சி, கரூரில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்!

தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (மார்ச் 31 ஆம் தேதி) திருவாரூரில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்கினார். தொடர்ந்து இன்று திருச்சி, கரூரில் பரப்புரையை மேற் கொள்கிறார்.

### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **01.04.2026 (புதன்கிழமை)** | | |
| காலை 9 மணி | **திருச்சி** **உழவர் சந்தை** (பொதுக்கூட்டம்) | திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர் திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் |
| மாலை 5 மணி | **கரூர்** **ராயனூர்** (பொதுக்கூட்டம்) | அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை |
| **02.04.2026 (வியாழக்கிழமை)** | | |
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |



**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



தமிழ்நாட்டை முதன்மை இடத்திற்குக் கொண்டு வந்துள்ள,
ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!